

# நற்செய்தி யாளர் வாழ்க்கையை மாற்றினார்

**“உனக்கு கிருபை காட்ட விரும்புகிறேன். நீ பட்டப்படிப்புப் பெறுவதற்காக உன்னைத் தேர்ச்சியாக்கத் தீர்மானித்துவிட்டேன்” என்று சொன்னார்.**

சொலுஸி கல்லூரியில் சேர்ந்த போது, அங்கிருந்த கலாச்சாரம் எனக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. அது 1970இன் பிற்பகுதி. அங்கு சேர்ந்த முதல் கலப்பின மாணவன் நான்தான். ராக் அன்ட் ரோல் இசை தட்டுடன் மிகப்பெரிய ஒரு இசை நாடா கருவியும் என்னிடம் இருந்தது. நானும்கூட ஒரு ராப் இசை கலைஞனைப்போலவே நடந்துகொள்வேன்.

ஆனால் செவந்த்-டே அட்வென்டிஸ்ட் திருச்சபையினர் என் மேல் நம்பிக்கைவைத்து, சொலுஸில் படிப்பதற்கு எனக்கு ஊக்கத் தொகை வழங்கினார்கள்; அது இன்றைய ஜிம்பாப்வேயில் புதர்நிறைந்த ஒரு பகுதியில் இருந்தது. அங்கு ஒரு வருடம் படித்துவிட்டு, பிறகு தென் ஆப்ரிக்காவில் உள்ள ஹெல்டர்பர்க் கல்லூரிக்குச் செல்லவேண்டும் என்பதுதான் என்னுடைய திட்டம். ஆனால் முதல் வருடம் முடிந்த பிறகும், அங்கேயே தொடர்ந்து படிக்கத் திட்டமிட்டேன்.

இறையியல் மாணவர்களில் நான் சுமாராகத்தான் படிப்பேன். கிரேக்க பாடம் மிகவும் கஷ்டமாக இருக்கும்; அதில் அதிக மதிப்பெண் எடுக்கமாட்டேன். தேர்ச்சிப்பெறுவதற்கே பெரும் போராட்டமாக இருக்கும். அந்தப் பாடம் எனக்குப் புரியாது. கிரேக்கப் பாடப் பேராசிரியரான லியோ ரவ்னியோ, என்னைப் படிக்கவைக்க படாதபாடு பட்டார். அவர் அன்புள்ள ஓர் ஊழியப்பணியாளர்; என்னை எப்படியாவது நல்ல மதிப்பெண்கள் பெற வைக்க பாடுபட்டார்.

1978இல் முதன்முதல் அங்கு

சேர்ந்தபோது, திரு. ரவ்னியா என்னிடம் அன்பாகப் பழகினார். செஸ் விளையாடச்சொல்லிக்கொடுத்தார்; அவருடைய வீட்டில் உட்கார்ந்து மணிக்கணக்கில் செஸ் விளையாடுவோம். அவர் ஃபின்லாந்தில் பிறந்தவர்; அமெரிக்காவில் பூர்வீக அமெரிக்கர்கள் மத்தியில் ஊழியம்செய்தவர்; பிறகு தென் ஆப்ரிக்காவில் பல்கலைழக்கத்தில் பேராசிரியராகப் பணியாற்றினார்; பிறகு ஓய்வு பெறும் வயதில் சொலுஸி கல்லூரியில் பணிக்குச் சேர்ந்தார். பல அனுபவங்களை என்னுடன் பகிர்ந்து கொண்டார். சொலுஸியில் வேலை செய்ய அவர் தீர்மானித்தது எனக்கு சந்தோஷமாக இருந்தது.

கிரேக்கப்பாட இறுதித் தேர்வு எழுதினேன். கண்டிப்பாகத் தேர்ச்சி பெறமாட்டேன் என்பது புரிந்தது. பரிட்சைத் தாளை திரு. ரவ்னியோவிடம் கொடுத்தபோது, “நான் தேர்ச்சிப் பெறமாட்டேன்” என்று சொன்னேன்.

சிரித்துக்கொண்டே “பரவாயில்லை” என்று சொன்னார்.

கிரேக்கப்பாடத்தில் தேர்ச்சிப் பெறாமல் படிப்பை முடிக்க முடியாது; அதனால் மறுவாரம் முழுவதும் மிகமனஅழுத்தத்தோடு, மனச்சோர்வோடு இருந்தேன். படிப்பை முடித்த பிறகு, திருமணம் செய்யத் தீர்மானித்திருந்ததால், எப்படியாவதுபடிப்பைமுடிக்கவேண்டுமென ஆசைப்பட்டேன். தேர்ச்சிப் பெறாமல் மீண்டும் ஆறுமாதம் படிக்க வேண்டியதை நினைத்தாலே சங்கடமாக இருந்தது.

தேர்வு முடிந்து ஒரு வாரம் கழித்து, திரு. ரவ்னியோ என்னை தன் அலுவலகத்திற்கு அழைத்தார். “நான்கு வருடங்களாக உன்னைக் கவனித்து வருகிறேன். அடிப்படைவாத சிந்தனைகளிலிருந்து மாறி, தேவனை நேசிக்கிற, கடினமாக உழைக்கிற ஒரு நபராக மாறியிருக்கிறாய். ஏன், உன்னுடைய ஒலிநாடா கருவியில்கூட ராக் இசைக்கு பதிலாக கிறிஸ்தவ ஒலிநாடாவை மாற்றிவிட்டாய். கிறிஸ்துவிடம் நெருங்கிச் செல்கிற அளவுக்கு கிறிஸ்துவோடு நீ நெருங்கிவிட்டாய்” என்று சொன்னார்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. வேறு யாருமே இந்த மாற்றங்களைக் கவனிக்கவில்லை.

“மற்ற பாடங்களையும்கூட நன்றாகப் படித்து, தேர்ச்சிப் பெற்றிருக்கிறாய். எனவே படித்து, பட்டம் பெறுவது உனக்கு முக்கியம்தான். கிரேக்கப்பாடத்திலும் முடிந்த அளவுக்கு கஷ்டப்பட்டுப் படித்தாலும், தேர்ச்சி பெறவில்லை.

“ஆனாலும் உனக்கு கிருபை காட்ட விரும்புகிறேன். நீ செய்யப் போகிற வேலையிலும் தேவன் உனக்கு ஒரு திட்டம் வைத்திருப்பார். நீ பட்டப்படிப்புப் பெறுவதற்காக உன்னைத் தேர்ச்சியாக்கத் தீர்மானித்துவிட்டேன்” என்று சொன்னார். பிறகு தேவ கரம் என்னோடு இருந்து, என்னை வழிநடத்தும்படி ஜெபித்தார்.

விடுதிக்குச் சென்றதும், முழங்காலிட்டு, ஆண்டவருக்கு நன்றி சொல்லி ஜெபித்தேன். நான் திருமணம்பண்ணவிருந்த பெண்ணிடம், “தேவனுடைய கிருபையால் நான்

படித்து, பட்டம்பெறப்போகிறேன்!" என்று சொன்னேன்.

திரு. ரவ்னியா அவர்களுக்கு நான் ரொம்பவும் கடன்பட்டிருக்கிறேன். அப்போதைய என் நிலையைத் தாண்டி, வருங்காலத்தில் என் நிலை எப்படி இருக்கப்போகிறது என்பதைத்தான் அவர் பார்த்தார். என் திறமையைப் பார்த்தார்.

ஜிம்பாப்வேயில் அட்வென்டிஸ்ட் திருச்சபையில் வாலிபர் ஊழியங்கள் இலாகா தலைவராக 18 வருடங்கள் பணியாற்ற ஆண்டவர் எனக்கு உதவினார். அதன் பிறகு, தென் ஆப்ரிக்கா - இந்தியப் பெருங்கடல் டிவிஷனின் வாலிபர் இலாக இயக்குனராகப் பணியாற்றினேன்; பிறகு வேறு தலைமைத்துவப் பொறுப்புகளிலும் இருந்தேன். தலைமைத்துவப் பயிற்சியில் முனைவர் பட்டமும் பெற்றேன்.

கிருபைபற்றியும், கிருபை பெறத் தகுதியில்லாத ஒருவருக்கு அதைக் காட்டக் நான் கற்றுக்கொள்ளவும் உதவின தேவனுக்கு நான் நன்றிசொல்லுகிறேன். தகுதியற்றவர்களுக்கு கிருபைகாட்ட திரு. ரவ்னியா அவர்களுடைய முன்மாதிரி எனக்கு மிகவும் உதவியது.

பாவத்தில் கீழ்த்தரமான நிலையில் இருக்கும்போதுகூட, தேவன் நம்மை எவ்வாறு மாற்றமுடியுமெனப் பார்க்கிறார். நம்முடைய தற்போதைய நிலையை வைத்து, நம்மைக் கைவிடமாட்டார். நம்மால் என்ன செய்யமுடியுமெனப் பார்க்கிறார். தேவனைப்போல தற்போதைய நிலையைத் தாண்டி நாம் பார்க்கவேண்டும்; மற்றவர்களிலுள்ள திறமைகளை அறியவேண்டும்.

சொலுஸி பல்கலைக்கழகத்தின் உணவகத்தைப் பெரிதாக்குவதற்கு 2015ம் ஆண்டின் பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் ஒரு பகுதிபயன்பட்டது. சொலுஸிபோன்ற அட்வென்டிஸ்ட் பள்ளிகள் இயேசுவின் சீக்கிர வருகை பற்றி உலகம் முழுவதிலும் அறிவிப்பதற்கு உங்களது காணிக்கை உதவுகிறது.

## கதைக் குறிப்புகள்

- இந்தச் சம்பவத்தை யாராவது ஒருவர் தன் சொந்தஅனுபவம்போலச் சொல்லலாம்.
- 2021இல் கோவிட்–19 பெருந்தொற்றால் யூஜின் ஃப்ரான்ஸ் மரித்தார்.
- யூஜின் பட்டப்படிப்பு பெற்று இரண்டு வருடங்களுக்கு பிறகு, தன்னுடைய 72ம் வயதில் 1984ம் ஆண்டு லியோ ரவ்னியா மரித்தார்.
- யூஜினை யூ–ட்யூபில் பார்ப்பதற்கு: *bit.ly/Eugene-Fransch*
- முகநூலில் புகைப்படங்களைப் பதிவிறக்குவதற்கு: *bit.ly/fb-mq.*
- தென் ஆப்ரிக்கா – இந்தியப் பெருங்கடல் டிவிஷனிலிருந்து தகவல் பதிவிறக்க: *bit.ly/sid-2022.*
- ஜிம்பாப்வேயின் பிரதான மார்க்கமாக கிறிஸ்தவ மார்க்கம் உள்ளது; அங்குள்ள மக்களில் 85 சதவீதத்தினர் புரொட்டஸ்டண்ட் கிறிஸ்தவர்கள்.